

நடைபெற உள்ள தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் கழக தேர்தல் பணி குறித்து கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு தலைமையில் வார் ரூமில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளர் கே.ஆர்.பெரியகருப்பன், கழக துணை பொதுச்செயலாளர் வெள்ளகோவில் மு.பெ.சாமிநாதன் மற்றும் கழக முன்னணியினர் கலந்து கொண்டனர்.



தாராபுரம் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் தி.மு.கழக வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து தாராபுரம் கிழக்கு ஒன்றியம், கொளத்துப்பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் தூத்துக்குடி வடக்கு மாவட்டக் கழக செயலாளர், முன்னாள் அமைச்சர் கீதா ஜீவன் பொதுமக்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் சட்டமன்ற உறுப்பினர் மார்க்கண்டேயன், ஒன்றிய கழகப் பொறுப்பாளர் கே.கே.துரைசாமி, காங்கேயம் நகர கழக செயலாளர் வசந்தம் நா. சேமலையப்பன் உள்பட தூத்துக்குடி மாவட்ட நிர்வாகிகள், பேரூர் கழக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

# இடைத்தேர்தல் களத்தில் விரட்டி அடிக்கப்படும் த.வெ.க. வேட்பாளர்கள்!

மக்கள் தந்த வெற்றியை செமத்தியான விலைக்கு விற்று, ஆளுங்கட்சிக்குத் தாவிய மதுராந்தகம், தாராபுரம் தொகுதி அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களால்தான் இரண்டு தொகுதிகளிலும் இடைத்தேர்தல் திணி க்கப்பட்டுள்ளது. எம்.எல்.ஏ. மரணமடைந்தால் இடைத்தேர்தல் வருவதை மக்கள் பார்த்திருப்பார்கள். எம்.எல்.ஏ.க்கள் விலை போனதால் இடைத்தேர்தலை சந்திக்கும் அவல நிலையைத் தமிழ்நாடு இப்போதுதான் பார்க்கிறது. அதனால்தான், ஜனநாயகம் மரணமடைந்ததால் நடைபெறுகிற இடைத்தேர்தல் என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முப்பெரும் விழா உரையில் முத்தாய்ப்பாகச் சொன்னார்.

**150 நாட்களுக்குள்ளாக, இரட்டை இலைக்குப் பதில் விசில் சின்னத்தில் போட்டியிட்டு வாக்கு கேட்கிறார்கள் த.வெ.க. வேட்பாளர்கள். தங்களால் விலைக்கு வாங்கப்பட்டவர்களையே களத்தில் நிறுத்தியிருக்கிறது ஊழலற்ற யோக்கியவான்கள் போலப் பேசும் விஜய் தலைமையிலான கட்சி. ஜனநாயகத்தை இந்தளவுக்கு கேலிக்கூத்தாக்கிய நிகழ்வை தமிழ்நாடு இதுவரை கண்டதில்லை. மக்களை எந்தக் கட்சியும் இது போலக் கேவலப்படுத்த முனைந்த தில்லை.**

இரண்டு தொகுதிகளிலும் த.வெ.க வேட்பாளர்கள் மக்களால் முற்றுகையிடப்படுகிறார்கள். விலை போனது பற்றி கேள்வி கேட்கிறார்கள். த.வெ.க ஆட்சியின் நிர்வாக சீர்கேடுகளை வெளிப்படையாகப் பேசுகிறார்கள். மின்வெட்டு, விலையேற்றம், குடிநீர்த் தட்டுப்பாடு போன்ற அன்றாட நெருக்கடிகளை முன்வைத்து முறையிடுகிறார்கள். எதற்கும் பதில் சொல்ல முடியாத நிலையில் த.வெ.க வேட்பாளர்கள் நடையைக் கட்டுகிறார்கள்.

**மதுராந்தகத்தில் வீராணம் குன்னம், சிறுதாம்பூர் உள்ளிட்ட இடங்களில் த.வெ.க வேட்பாளர் மரகதம் குமரவேலை மக்கள் விரட்டினர். தாராபுரத்தில் குண்டடம், வேடசந்தூர் கிராமம் ஆகிய இடங்களில் த.வெ.க. வேட்பாளர் சத்யபாமாவை மக்கள் விரட்டியுள்ளனர். த.வெ.க.வின் வேட்பாளர்களை மக்கள் விரட்டியடிப்பது தொடர்ந்து கொண்டே இருக்கிறது.**

ஆட்சிக்கு வந்த இவ்வளவு குறுகிய காலத்தில் மக்களின் கடும் அதிருப்தியினால் வெளிப்படையான எதிர்ப்பை சந்திக்கும் கட்சி த.வெ.க.தான். அனைத்து விதங்களிலும் நிர்வாகத் திறனற்று, மக்களை ஏமாற்றி, தமிழ்நாட்டை வஞ்சிக்கும் த.வெ.க ஆட்சியாளர்கள் ஏதேனும் பழைய வழக்குகளைக் குறிப்பிட்டு, அதை தி.மு.க.வுக்கு எதிரானதாக சித்தரிக்க முடியுமா எனப் பகீரதப் பிரயத்தனம் செய்து பார்க்கிறார்கள். நேர்மையாக எதையும் எதிர்கொள்ள வக்கில்லாமல், பொய்யாகவும் அவதூறாகவும் பேசிப் பழி போட முடியுமா என்பது மட்டுமே ஆட்சியாளர்களின் முழுநேரத் தொழிலாக உள்ளது.

**அவதூறுகளைத் தொடர்ந்து பேசினால் சட்டப்படியாக வழக்கை சந்திக்க நேரிடும் என்று எச்சரிக்கை விடுத்திருக் கிறார் தி.மு.க.வின் சட்டத்துறைச் செயலாளரான மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ அவர்கள். பொய் பேசுவதையே இலட்சியமாகக் கொண்டுள்ள அமைச்சர் நிர்மல்குமாருக்குத்தான் இந்த எச்சரிக்கை. த.வெ.க அரசின் சட்டத்துறை அமைச்சர் அவர்தான். காவல்துறை அமைச்சராகப் பொறுப்பு வகிப்பவர் முதலமைச்சர் விஜய். இவர்களின் நிர்வாகத்தில் தமிழ்நாடு எந்த இலட்சணத்தில் இருக்கிறது என்பதற்கு நீண்ட பட்டியலே உள்ளது.**

### சட்டம் ஒழுங்கை சீரழிக்கும் த.வெ.க.வினர்!

★ த.வெ.க. சார்பில் போட்டியிட்ட 92 வேட்பாளர்கள் மீது குற்ற வழக்குகள் இருப்பதாகத் தேர்தல் பிரமாணப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. 41 எம்.எல்.ஏ.க் கள் மீது குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ளன. இதில் 19 பேர் மீது கொலை, கடத்தல் போன்ற மிகக் கடுமையான பிரிவுகளில் வழக்குகள் உள்ளன.

★ த.வெ.க. ஆட்சிக்கு வந்த 150 நாளுக்குள் 219 பாலியல் குற்றங்கள் அரங்கேறியிருக்கின்றன. தமிழகத்தில் நடைபெறும் சட்டம் ஒழுங்கு சீர்கேட்டிற்கு 90 சதவீதம் த.வெ.க.வினரே காரணமாக இருக்கிறார்கள்.

★ ராணிப்பேட்டை மேற்கு மாவட்ட த.வெ.க. செயலாளர் விஜய் மோகன் மீது ஆற்காட்டைச் சேர்ந்த 34 வயது இளம் பெண் ஒருவர் பாலியல் தொல்லை மற்றும் மிரட்டல் விடுத்ததாக முதலமைச்ச ரின் தனிப்பிரிவு மற்றும் காவல்துறையில் புகார் அளித்தார்.

★ வேலை வாங்கித் தருவதாகக் கூறி காரில் அழைத்துச் சென்று, குளிர் பானத்தில் மயக்க மருந்து கலந்து கொடுத்து பாலியல் வன்கொடுமை செய்த குற்றச் சாட்டில் த.வெ.க. இளைஞர் அணி அமைப்பாளர் பாலமுருகன், த.வெ.க. நிர்வாகி ஜெயபால் ஆகிய இருவர் போக்சோ, பெண்களுக்கு எதிரான வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர். இந்தச் சம்பவத்தில் குற்றவாளி களுக்கு ஆதரவாகச் செயல்பட்டு, வழக்கை சமரசம் செய்ய முயன்றதாக த.வெ.க.வின் ஸ்ரீவைகுண்டம் எம்.எல்.ஏ. சரவணன் மீது பாதிக்கப்பட்ட பெண் குற்றம் சாட்டினார்.



**கோவி.லெனின்**
தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர்

★ ஆர்.கே.நகர் பகுதியில் 10 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை அளித்த புகாரில், த.வெ.க.வின் வார்டு செயலா ளரான தினேஷ் என்பவர் போக்சோ சட்டத்தின் கீழ் கைதானார்.

★ பொள்ளாச்சி பாலியல் கொடூர சம்பவத்தைப் போல, சேலம் மாநகரப் பகுதியில், சுமார் 50க்கும் மேற்பட்ட பெண்களை ஆபாசமாக வீடியோ எடுத்து, அதை வைத்தே மிரட்டி பாலியல் தொல்லை கொடுத்து வந்த வீரபாண்டி பகுதியைச் சேர்ந்த த.வெ,க, பிரமுகர் மணிகண்டன் கைது செய்யப்பட்டார்.

★ கிருஷ்ணராயபுரம் கிழக்கு ஒன்றிய த.வெ.க. செயலாளர் ரமேஷ் மருந்துக்கடையில் வேலை பார்த்த பெண்ணைப் பின்தொடர்ந்து பாலியல் தொல்லை கொடுத்ததாகப் புகார் எழுந்தது. பொதுமக்களே சேர்ந்து அவரை நையப் புடைத்தனர்.

★ 2026 செப்டம்பர் 13ஆம் தேதி சென்னையில் திருப்பதி குடை ஊர்வலத்தின் போது பெண் போலீஸ்காரரை அவதூறாகவும் ஆபாசமாகவும் திட்டி ரகளையில் ஈடுபட்டார் வில்லிவாக்கம் கிழக்குப் பகுதி இணைச் செயலாளர் மதன்ராஜ்.

### சிறுமிகளுக்கு பாதுகாப்பில்லாத விஜய் ஆட்சி!

★ 2026 மே 10 அன்று விஜய் பதவியேற்ற நிலையில், மே 21 அன்று கோவை சூலூரில் 10 வயது சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட நிகழ்வு தமிழ்நாட்டையே அதிர வைத்தது. குற்றவாளி யைக் காப்பாற்றும் வகையில், கொலையான சிறுமியின் தாய் மீதே பழி போட்டனர் த.வெ.க. நிர்வாகிகள்.

★ 2026 ஜூன் 15ஆம் தேதி கும்மிடி ப்பூண்டி, திருவள்ளூர், தாம்பரம், சென்னை, பூந்தமல்லி என ஒரே நாளில் 5 சிறுமிகளுக்கு பாலியல் வன்கொடுமைகள் நடந்தன.

★ தேன்கனிக்கோட்டையில் பள்ளி முடிந்து வீடு திரும்பிய 8 வயது சிறுமியை மர்ம நபர் ஒருவர் கடத்திச் சென்று பாலியல் வன்கொடுமை செய்தார்.

★ பூந்தமல்லி அருகே காட்டுப்பாக்கத்தைச் சேர்ந்த 7 வயது சிறுமி, கார் ஓட்டுநர் ஒருவரால் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தப்பட்டார்.

இத்தகையக் கொடூரக் குற்றங்கள் மீது காவல்துறை அலட்சியமான வகையில் நடவடிக்கை எடுத்ததால் பள்ளிச் சிறுமிகள் கடத்தப்படுவதும், பாலியல் துன்பங்களுக்கு உள்ளாவதும் தொடர்கதையாகிறது.

சிறுமிகள் மட்டுமின்றி மூதாட்டிகளுக் கும் பாலியல் கொடூரம் அரங்கேறும் மாநிலமாகத் தமிழ்நாட்டை மாற்றியதுதான் விஜய் தலைமையிலான த.வெ.க. ஆட்சியின் அவலம் நிறைந்த மாற்றம். வேளச்சேரி, பவானி, குமாரபாளையம் உள்ளிட்ட பல இடங்களிலும் மூதாட்டிகளுக்கு பாலியல் கொடூரங்கள் நிகழ்ந்துள்ளன. புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடியில் 35 வயது மாற்றுத்திறனாளிப் பெண் கூட்டுப்பாலியல் கொடூரத்திற்குள்ளானார்.

### சிங்கப்பெண் போலீசுக்கும் பாதுகாப்பில்லை!

**ராமநாதபுரத்தில் சிங்கப்பெண் போலீசிடமே மதுபோதையில் தகராறு செய்திருக்கிறார் த.வெ.க. வழக்கறிஞர் வினோத். சிங்கப் பெண் சிறப்பு அதிரடிப்படையைச் சேர்ந்த பெண் போலீசுக்கு பாலியல் தொல்லை கொடுத்த புகாரில் தூத்துக்குடி மாவட்டம், ஆறுமுகநேரி போலீஸ் ஸ்டேஷன் இன்ஸ்பெக்டர் திலீபன் இடைநீக்கம் செய்யப்பட்டார்.**

சிங்கப் பெண் பாதுகாப்பு படையை சேர்ந்தவருக்கு பாதுகாப்பு கேட்கும் நிலையில்தான் சட்டம் ஒழுங்கு இருக்கிறது.

நாள்தோறும் பாலியல் குற்றங்கள், கொலைகள், கொள்ளைகள், ஆன்லைன் மோசடிகள் என த.வெ.க. ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சந்தி சிரிக்கிறது. இடைத்தேர்தல் களத்தில், ஆளுங்கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை பொதுமக்கள் விரட்டி அடிக்கிறார்கள். தி.மு.க. மீது பொய்யாக எதையாவது பரப்பி, உண்மையான அவலத்தை மறைக்க முடியுமா என முயற்சி செய்கிறது விஜய் அரசு. மக்களே எதிர்க்கத் தொடங்கிய பிறகு எப்படி மறைக்க முடியும்?

மதுராந்தகம் – தாராபுரம் இடைத்தேர்தல்:

## தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு - சிறுபான்மை மக்கள் கட்சி ஆதரவு!

### நிறுவனத் தலைவர் எர்ணாவூர் எஸ்.ஜெயராஜ் அறிக்கை!

சென்னை, செப். 24 –

சிறுபான்மை மக்கள் கட்சி நிறுவனத் தலைவர் எர்ணாவூர் எஸ். ஜெயராஜ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

திராவிட முன்னேற்ற கழகம் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு சிறுபான்மை மக்கள் கட்சியின் அன்பின் நல்வாழ்த்துகளும் வணக்கங்களும்...

முன்னாள் முதல்வர் பாசத் தளபதி மு.க. ஸ்டாலின் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி தலைவர் அவர்களுக்கு தமிழ்நாட்டில் நடைபெறவிற்கும் 2026 ஆம் ஆண்டு மதுராந்தகம், தாராபுரம் சட்டமன்ற இடைத்தேர்தலில் ஒத்த கருத்துடைய ஜனநாயக சக்திகளையும், இடதுசாரி சிந்தை கொண்டவர்களையும்,சமூக நீதி காக்கிறவர்களையும் ஒருங்கிணைந்து அறிவார்ந்த சமுதாயம் மலரவும்,பாசிச மற்றும் மதவாத சக்திகளை எதிர்க்கவும், கொள்கை அடிப்படையிலான, மத நல்லிணக்கம் மற்றும் மாநில உரிமைகளை பாதுகாக்கவும் சட்டமன்றத்தில் தனது தனி பெரும்பான்மையை நிரூபிக்க குதிரை பேரம் நடத்தி தனக்கு வாக்கு செலுத்திய பொது மக்களை ஏமாற்றி சட்டமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கிய ஆளும் ரீல்ஸ் அரசு தானாக ஏற்படுத்திய இந்த இடைத்தேர்தலில் மதச்சார்ப்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு சிறுபான்மையி னரின் வாக்கு வங்கியை உறுதிபடுத்தும் விதத்தில் சிறுபான்மை மக்கள் கட்சி தனது முழு ஆதரவு வழங்கி அதன் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் முழுமையாக கழகத்தின் வேட்பாளர்கள் வெற்றிக்கு உழைப்போம் என்று உறுதி கூறுகிறோம்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



மதுராந்தகம் இடைத்தேர்தலில் சேலம் மாவட்ட கழகச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான இரா. இராஜேந்திரன் சேலம் மத்திய மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட ஜானகிபுரம், கள்ளபிரான்புரம் ஊராட்சிகளுக்குட்பட்ட 68, 69, 71, 72, 73 ஆகிய வாக்குச்சாவடிகளில் வாக்காளர்களை சந்தித்து, கழகத் தலைவர் அவர்களின் ஆட்சியில் தமிழ்நாட்டில் ஏற்பட்ட வளர்ச்சிக்கான திட்டங்களை எடுத்துக் கூறி வாக்கு சேகரித்தார். உடன் ஒன்றிய செயலாளர் சத்தியசாய்நாதன் , ஒன்றிய துணை செயலாளர்கள், கிளை செயலாளர்கள்,சார்பு அணி நிர்வாகிகள், கலந்துகொண்டனர்.

ஆசிய விளையாட்டு கிரிக்கெட்:

## இந்திய மகளிர் அணி வெற்றி!

நிஷன், செப். 24–

மகளிருக்கான ஆசிய கோப்பை இறுதிப்போட்டி நேற்று முன்தினம் நடந்தது. இதில் இந்தியா, இலங்கை அணிகள் மோதின. டாஸ் வென்ற இந்தியா பேட்டிங் தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் ஆடிய இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 3 விக்கெட்டுக்கு 216 ரன்கள் குவித்தது.

முதல் விக்கெட்டுக்கு ஷபாலி வர்மாஸ்மிருதி மந்தனா ஜோடி 99 ரன்கள் எடுத்தது.

அரை சதம் கடப்பார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில். ஷபாலி வர்மா 48 ரன்னில் ஆட்டம் இழந்தார். அவர் 28 பந்தில் 3 சிக்சர், 3 பவுண்டரி உள்பட 48 ரன்கள் குவித்தார்.

தொடர்ந்து ஆடிய ஸ்மிருதி மந்தனா அரை சதம் கடந்து 79 ரன்னில் ஆட்டமிழந்தார். ஹர்மன்பிரீத் கவுர் 19 ரன்னில் அவுட்டானார்.

கடைசி கட்டத்தில் இறங்கிய ரிச்சா கோஷ் 22 பந்தில் 3 சிக்சர், 6 பவுண்டரி உள்பட 49 ரன் குவித்தார்.

இதையடுத்து, 217 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இலங்கை களமிறங்கியது.

இறுதியில், இலங்கை அணி 15.4 ஓவரில் 69 ரன்களுக்கு ஆல் அவுட்டானது.

இதன்மூலம் 147 ரன்கள் வித்தியாசத்தில் இந்தியா அபார வெற்றி பெற்றதுடன், ஆசிய போட்டியில் மீண்டும் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றி அசத்தியது.

இலங்கை அணி வெள்ளிப் பதக்கம் வென்றது. பாகிஸ்தான் அணி வெண்கலம் வென்றது.

இந்தியா சார்பில் தீப்தி சர்மா 3 விக்கெட், ஷபாலி வர்மா, ஸ்ரீசரணி, ஷ்ரேயங்கா பாட்டீல் தலா 2 விக்கெட் வீழ்த்தினர்.

கடந்த ஆசிய விளையாட்டிலும் மகளிர் கிரிக்கெட்டில் இந்திய அணி சாம்பியன் பட்டம் வென்று இருந்தது குறிப்பிடத்தக்கது.



தாராபுரம் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் தி.மு.கழக வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து தாராபுரம் மேற்கு ஒன்றியம், பொட்டிக்காம்பாளையம், கோவிந்தாபுரம் ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திருப்பூர் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி எம்.பி., பொதுமக்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் மடத்துக்குளம் சட்டமன்ற உறுப்பினர் இரா.ஜெயராமகிருஷ்ணன், ஒன்றிய கழகச் செயலாளர் எஸ்.வி.செந்தில்குமார், பொதுக்குழு உறுப்பினர் ஏ.எஸ்.கேகார்த்திகேயன், மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் டி.சிதம்பரசாமி உள்பட மாவட்ட, ஒன்றிய, நகர கிளை கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.